PRIMARY SCHOOL

PRELIMINARY EXAMINATION - 2015

TAMIL LANGUAGE - PAPER 2

PRIMARY 6

Name: ____________( )        Date: ________

Class: Pri 6 ______        Parent's Signature: ____________

**Total time: 1h 40 min**

INSTRUCTIONS TO CANDIDATES

DO NOT TURN OVER THIS BOOKLET UNTIL YOU ARE TOLD TO DO SO.

FOLLOW ALL INSTRUCTIONS CAREFULLY.

ANSWER ALL THE QUESTIONS.

| எண் | தலைப்பு | மதிப்பெண் | மதிப்பெண் |
|---|---|---|---|
| 1 | வேற்றுமை | 12 | |
| 2 | செய்யுள் / பழமொழி | 12 | |
| 3 | தெரிவுவிடைக் கருத்தறிதல் | 10 | |
| 4 | பொருள் | 6 | |
| 5 | கருத்து விளக்கப்படக் கருத்தறிதல் | 6 | |
| | மொத்தம் | 46 | |

# P6 PRELIMINARY TESTPAPER 12

இவ்வினாத்தாளில் இரண்டு வினாக்கள் இடம்பெறும். அவற்றுள் *ஒன்றுக்கு* மட்டும் விடையளிக்க வேண்டும். இவ்வினாத்தாளைப் படிப்பதற்கும், வினாவைத் தேர்ந்தெடுப்பதற்கும், கட்டுரை எழுதுவதற்கும் ***50*** *நிமிடங்கள்* கொடுக்கப்படும். வினாவைத் தேர்ந்தெடுப்பதற்கு ***10*** *நிமிடங்களுக்கு* மேல் செலவிட வேண்டாம்.

*வினா **1***


*நான் ஆபத்தில் சிக்கிய ஒரு சம்பவம்*

நீ கட்டுரை எழுதுவதற்குக் கீழ்க்காணும் குறிப்புகளைப் பயன்படுத்திக் கொள்ளலாம்.

- அந்த ஆபத்து எங்கே, எப்போது நடந்தது?
- அப்போது நீ என்ன செய்துகொண்டிருந்தாய்?
- உன் மனநிலை எப்படி இருந்தது?
- நீயும் உன் நண்பர்களும் எவ்வாறு மீட்கப்பட்டீர்கள் ?
- அந்தச் சம்பவம் உன்னையும் உன் நண்பர்களையும் எவ்வாறு பாதித்தது?

வினா 2

கீழ்க்காணும் படத்தொடரை அடிப்படையாகக் கொண்டு 100 சொற்களுக்குக் குறையாமல் ஒரு கட்டுரை / கதை எழுது. படத்தொடரின் அடியில் கொடுக்கப்பட்டிருக்கும் சொற்களையும் சொற்றொடர்களையும் நீ இந்தக் கட்டுரை / கதை எழுதுவதற்குப் பயன்படுத்திக்கொள்ளலாம்.




| | |
|---|---|
| தனியாக | ஆசை வார்த்தை |
| விற்பனையாளர் | கடிகாரத்தை |
| கதவைத் தட்டி | தாயிடம் |
| குறைந்த விலைக்கு | நடந்ததைக் கூறினான் |

# P6 PRELIMINARY
# TESTPAPER 12

"அ" பிரிவு

**A1 வேற்றுமை**

**Q1** முதல் **Q6** வரையுள்ள கோடிட்ட இடங்களை நிரப்புவதற்கு மிகப் பொருத்தமான வேற்றுமை உருபு ஏற்ற சொல்லைக் கொடுக்கப்பட்டிருக்கும் சொற்களிலிருந்து தேர்ந்தெடு. அதன் பின்னர், **OAS** விடைத்தாளில், அந்த விடையின் எண்ணுள்ள நீள்வட்டத்தை நிழலிடு. (**12** மதிப்பெண்கள்)

பள்ளி முடிந்து வீட்டிற்குத் திரும்பாமல் பள்ளியில் விளையாடுவது என்றால் சேகருக்குப் பிடிக்கும். அவ்வாறே ஒருநாள் வீட்டிற்குத் திரும்பாமல் பள்ளித் ( 1 ) ______________ விளையாடிக் கொண்டிருந்தான். இதனை அவனது வகுப்பு ஆசிரியர் கவனித்து, சேகரின் ( 2 ) ______________ தெரிவித்தார். திடலில் நண்பர்களுடன் விளையாடிக்கொண்டிருந்த சேகருக்கு ஓர் அதிர்ச்சி காத்திருந்தது. அவன் தாயார், தூரத்தில் நின்று அவனைக் கவனித்துக்கொண்டிருப்பதைப் பார்த்தான். அவன் விளையாடிக்கொண்டிருந்த பந்தை ( 3 ) ______________ பெற்றுக்கொண்டான். விரைந்து சென்று தனது பள்ளிப் பையை எடுத்துக் கொண்டு தாயாரின் அருகில் சென்றான். இதைக்கண்ட ( 4 ) ______________ தாயார், சேகரைக் கடிந்துரைத்தார். "இவ்வளவு காலமாகப் பள்ளியில் தங்கி நண்பர்களுடன் படிக்கிறாய் என்றல்லவா கூறினாய்? ( 5 ) ______________ வந்து பார்த்தால் கதை வேறாக அல்லவா இருக்கிறது?" என்று அவர் திட்டத் தொடங்கினார். சேகரை அடிக்கக் ( 6 ) ______________ ஓங்கினார். ஆனால் அங்கு வந்த அவனது வகுப்பு ஆசிரியர் அதனைத் தடுத்து நிறுத்தினார்.

1. 1. திடலுக்கு
   2. திடலில்
   3. திடலின்
   4. திடலிலிருந்து

2. 1. தாயாருடைய
   2. தாயாரை
   3. தாயாரிடம்
   4. தாயார்

3. 1. நண்பனுடன்
   2. நண்பனால்
   3. நண்பனுக்கு
   4. நண்பனிடமிருந்து

1. அவனிடமிருந்து
2. அவனாடு
3. அவனது
4. அவனை

1. பள்ளியால்
2. பள்ளியை
3. பள்ளிக்கு
4. பள்ளியோடு

1. கையை
2. கையால்
3. கைக்கு
4. கையோடு

**A2 செய்யுள் / பழமொழி**

Q7 முதல் Q12 வரையுள்ள செய்யுள் / பழமொழியை நிறைவு செய்வதற்கு ஏற்ற சொல்லைக் கொடுக்கப்பட்டிருக்கும் சொற்களிலிருந்து தேர்ந்தெடு. அதன் பின்னர், OAS விடைத்தாளில், அந்த விடையின் எண்ணுள்ள நீள்வட்டத்தை நிழலிடு. (12 மதிப்பெண்கள்)

7. எண்ணெழுத்து __________.

1. புகழேல்
2. இகழேல்
3. வழங்கேல்
4. விலக்கேல்

8. பெருமையும் __________ தான் தர வருமே.

1. புகழும்
2. வறுமையும்
3. சிறுமையும்
4. செழுமையும்

9. கெடுப்பதூம் __________ சார்வாய்மற் றாங்கே
எடுப்பதூஉம் எல்லாம் மழை.

1. கெட்டார்க்கு
2. சான்றோர்க்கு
3. நல்லார்க்கு
4. முத்தோர்க்கு

10. __________ ஈட்டலும் காத்தலும் காத்த
வகுத்தலும் வல்ல தரசு.

1. இயற்றலும்
2. இசைப்பதும்
3. இயல்வதும்
4. இயக்குதலும்

11. முதல் கோணல் ______________ கோணல்.

1. சற்றும்
2. முற்றும்
3. ஆற்றும்
4. பற்றும்

12. வருமுன்னர்க் காவாதான் ______________ எரிமுன்னர் வைத்தூறு போலக் கெடும்.

1. செயற்கை
2. செயலை
3. நிலைமை
4. வாழ்க்கை

3 தெரிவுவிடைக் கருத்தறிதல்

ன்வரும் கதையைக் கருத்தூன்றிப் படி.

ராபின்சன் க்ரூஸோ (Robinson Crusoe) வீரமுள்ள இளைஞன். தூர தேசங்களுக்குக் கப்பலில் பயணம் செய்வதில் அவனுக்கு விருப்பம் உண்டு. எப்போதும் அபாயங்கள் ***சூழப்பட்டிருக்கும்*** கப்பல் பயணத்தை மகன் மேற்கொள்வதை அவன் தந்தை முதலில் விரும்பவில்லை. இருப்பினும், ராபின்சன் க்ரூஸோ அவனுடைய முடிவுகளை அவனே எடுக்குமளவுக்கு அவன் தந்தை சுதந்திரம் அளித்திருந்தார்.

மாலுமியாகக் கப்பலில் பயணம் செய்வதில் ராபின்சனுக்கு அதிக ஆர்வம் இருந்தது. த்தொன்பது வயதில் அவன் முதல் பயணத்தை மேற்கொண்டான். அது அபாயகரமாக முடிந்தது. மிகப் பெரிய புயல் தாக்கிச் ***சேதமடைந்து***, அவன் சென்ற கப்பல் உடைந்தது. அதில் இருந்தவர்களுள் ராபின்சன் மட்டும் உயிர் பிழைத்தான். அவனுக்கு வீடு திரும்புவதற்கு விருப்பமில்லை. அவன் பிரேசில் (Brazil) நாட்டைச் சென்றடைந்தான். அங்கு ஒரு விவசாயியாகப் பணி புரிந்தான்.

அங்குக் கடுமையாக உழைத்தான் ராபின்சன் க்ரூஸோ. நிறையப் பணம் சம்பாதித்தான். வந்த இலாபத்தை மேலும் அதிகரிக்க, பல வியாபாரங்களில் முதலீடு செய்ததில் பெரும் பணக்காரனான்.

ஒருமுறை, வியாபார விசயமாக அவன் ஆப்பிரிக்கா போக நேரிட்டது. முதல் பயணத்தின் போது அவனுக்கு ஏற்பட்ட அதே அனுபவம் இப்போதும் ஏற்பட்டது. பெரும்புயல் தாக்கியது; அவன் கப்பல் கடலில் மூழ்கியது; அவன் மட்டும் தப்பிப் பிழைத்து ஆள் நடமாட்டம் இல்லாத ஒரு தீவை அடைந்தான். கரையை அடைந்து நீண்ட நேரம் அங்கேயே மயங்கிக் கிடந்தான்.

ராபின்சன் உணர்வு ***பெற்றதும்*** மனிதர்கள் யாராவது அந்தத் தீவில் வசிக்கிறார்களா என்று சுற்றிச் சுற்றி அலைந்தான். ஒருவரும் கண்ணில் தென்படவில்லை. பெரும் முயற்சி செய்து தான் வசிக்க அங்கேயே ஒரு வீட்டைக் கட்டிக் கொண்டான். ஏற்கெனவே, விவசாயத்தில் அவனுக்கு இருந்த அனுபவம் இப்போது கை கொடுத்தது. பயிர்த்தொழிலை மேற்கொண்டு நெல், பார்லி முதலியவற்றை விளைவித்தான். காட்டு ஆடுகளைக் கொன்று

மாமிச உணவு தயாரித்துக் கொண்டான். சில ஆடுகளைப் பழக்கி அவற்றிலிருந்து பால் கறந்து அதைப் பயன்படுத்தி வெண்ணெய், பாலாடைக்கட்டி ஆகியவற்றையும் தயாரித்துக் கொண்டான். இருபத்தாறு ஆண்டுகளாகத் தன் வாழ்க்கையை, தான் ஒருவனாகவே அந்தத் தீவில் அவன் கழித்தான்.

**(தழுவல்- புகழ்பெற்ற காலத்தை வென்ற கதைகள்)**

**Q13** முதல் **Q17** வரையுள்ள வினாக்கள் மேற்கண்ட கருத்தறிதல் பகுதியையொட்டி அமைந்துள்ளன. ஒவ்வொரு வினாவிற்கும் உரிய மிகப் பொருத்தமான விடையைத் தேர்ந்தெடு. அதன் பின்னர், **OAS** விடைத்தாளில், அந்த விடையின் எண்ணுள்ள நீள்வட்டத்தை நிழலிடு. **(10** மதிப்பெண்கள்)

13. ராபின்சனுக்கு மற்ற நாடுகளுக்குக் பயணம் மேற்கொள்ள ஏன் விருப்பம் அதிகம்?

(1) அவன் துணிச்சல்மிக்க இளைஞனாக இருந்ததால்
(2) அவன் பணக்கார வாலிபனாக இருந்ததால்
(3) அவன் நண்பர்களுடன் சேர்ந்து பொழுது போக்க நினைத்ததால்
(4) அவன் கப்பல் பயணங்களை அதிகம் விரும்பியதால்

14. ராபின்சனுக்கு அவனது தந்தையார் எதற்குச் சுதந்திரம் அளித்திருந்தார்?

(1) அபாயங்கள் நிறைந்த சூழல்களில் ஈடுபடுவதற்கு
(2) வியாபாரத்தில் முதலீடு செய்வதற்கு
(3) தனியாகக் கப்பலில் பயணம் செய்வதற்கு
(4) சுயமாக முடிவுகள் எடுப்பதற்கு

15. ராபின்சனின் முதல் கப்பல் பயணம் எதனால் அபாயகரமாக முடிந்தது?

(1) கடல் கொந்தளிப்பு ஏற்பட்டதால்
(2) பெரும் புயல் கப்பலைத் தாக்கியதால்
(3) ராபின்சனுக்கு மாலுமியாக இயங்க சரிவர தெரியாததால்
(4) கப்பல் கடலில் மூழ்கியதால்

16. தீவில் வீடு கட்டுவது ராபின்சனுக்கு ஏன் பெரும் முயற்சியாக இருந்தது?

(1) தீவில் வீடு கட்டுவதற்குப் பொருள்கள் இல்லாததால்
(2) தீவில் உதவிக்கு யாரும் இல்லாததால்
(3) தீவில் சந்தித்துப் பேச யாரும் இல்லாததால்
(4) தீவில் வீடு கட்டுவதற்கு ராபின்சனுக்கு அனுமதி இல்லாததால்

17. இறுதியில் ராபின்சனுக்குத் தீவில் வசிப்பதற்கு எது உதவியாக இருந்தது?

(1) அவனோடு இருந்த காட்டு ஆடுகள்
(2) அவனே சொந்தமாகக் கட்டிக் கொண்ட வீடு
(3) அவனுக்கு விவசாயத்தில் இருந்த முன் அனுபவம்
(4) அவனுக்குக் கப்பலிலிருந்து கிடைத்த பொருள்கள்

**B4 சொற்பொருள்**

**Q18** முதல் **Q20** வரையுள்ள சொற்கள் மேற்கண்ட கருத்தறிதல் பகுதியில் இடம்பெற்றவை. அவற்றின் பொருளை உணர்த்தும் சரியான சொல்லைக் கொடுக்கப்பட்டிருக்கும் சொற்களிலிருந்து தேர்ந்தெடு. அதன் பின்னர், **OAS** விடைத்தாளில், அந்த விடையின் எண்ணுள்ள நீள்வட்டத்தை நிழலிடு. **(6 மதிப்பெண்கள்)**

18. சூழப்பட்டிருக்கும்

1. படர்ந்திருக்கும்
2. நிறைந்திருக்கும்
3. கூடியிருக்கும்
4. இல்லாதிருக்கும்

19. சேதமடைந்து


1. மோசமடைந்து
2. நாசமடைந்து
3. பாழடைந்து
4. உருக்குலைந்து

20. பெற்றதும்

1. திரும்பியதும்
2. சென்றதும்
3. இழந்ததும்
4. மாறியதும்

**கருத்து விளக்கப்படக் கருத்தறிதல்**

பின்வரும் விளம்பரத்தைத் கருத்தூன்றிப் படி:




படைக்கப்படும் வரலாற்றுக் கண்காட்சி மற்றும் கலாச்சார இரவு

**க்கள் கழகத்தின் ஐம்பது ஆண்டு நிறைவை முன்னிட்டு**

**காலை 11 மணி: கண்காட்சி**

**மதிய நேர படைப்புகள்: மதியம் 12.30 முதல் 1 மணி வரை**

**கலாச்சார படைப்புகள்: இரவு 8 முதல் 9 மணி வரை**

- தொடக்க, உயர்நிலைப் பள்ளி மாணவர்களின் கம்போங் தொடர்பான படைப்புகளைக் கண்காட்சியின்போது பார்க்கலாம்
- நமது நாட்டின் கம்போங் பழக்க வழக்கங்களை விளக்கும் 30 நிமிடப் படச்சுருள் மாலை 5 முதல் இரவு 7.30 மணி வரை ஒளிபரப்பாகும்

சிறப்பு விருந்தினர்: திரு கௌ பூன் வான்

சுகாதார அமைச்சர் மற்றும் செம்பாவாங் அடித்தள அமைப்புகளின் ஆலோசகர்

**அனுமதி இலவசம்**

முதல் Q23 வரை இடம்பெற்றுள்ள வினாக்கள் முன்பக்கத்தில் தரப்பட்டுள்ள விளம்பரத்தை ப்படையாகக் கொண்டு அமைந்துள்ளன. ஒவ்வொரு வினாவிற்கும் உரிய மிகப் ாருத்தமான விடையைத் தேர்ந்தெடு. அதன் பின்னர், OAS விடைத்தாளில், அந்த டயின் எண்ணுள்ள நீள்வட்டத்தை நிழலிடு. (6 மதிப்பெண்கள்)

நிகழ்ச்சி நடத்தப்படுவதற்கான காரணம் என்ன?

1. மக்கள் கழகத்தின் ஐம்பது ஆண்டு நிறைவைக் கொண்டாட
2. சிறப்பு விருந்தினர் வருகை தருவதை முன்னிட்டு
3. மாணவர்களுக்கு கம்பொங் தொடர்பான படைப்புகளைக் காட்ட.
4. நிகழ்ச்சியை மக்களுக்கு இலவசமாக வழங்க

இந்நிகழ்ச்சியில் மக்கள் எதையெல்லாம் எதிர்பார்க்கலாம்?

1. கம்போங் வரலாற்றுக் கண்காட்சி
2. மதிய நேரப் படைப்புகள்
3. இரவு வேளையின் கலாச்சாரப் படைப்புகள்
4. மேல் கூறப்பட்ட அனைத்தும்.

இந்நிகழ்ச்சியில் யாரின் படைப்புகளைப் பார்க்கலாம்?

1. பாலர் பள்ளி மாணவர்களின் படைப்புகளை
2. தொடக்க மற்றும் உயர்நிலைப் பள்ளி மாணவர்களின் படைப்புகள்
3. பலகலைக் கழக மற்றும் கல்லூரி மாணவர்களின் படைப்புகள்
4. மக்கள் கழக உறுப்பினர்களின் படைப்புகளை

cter: Mdm

"ஆ" பிரிவு

**C6 ஒலிவேறுபாட்டுச் சொற்கள்**

பின்வரும் பகுதியில் Q24 முதல் Q28 வரையுள்ள கோடிட்ட இடங்களை நிரப்புவதற்குப் பொருத்தமான ஒலி வேறுபாட்டுச் சொற்கள் பகுதியின் அடியில் கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றிலிருந்து ஒவ்வொரு கோடிட்ட இடத்தையும் நிரப்புவதற்கு ஏற்ற மிகச் சரியான விடையைத் தேர்ந்தெடுத்து அதன் எண்ணை அடைப்புக்குறிக்குள் எழுது . (10 மதிப்பெண்கள்)

| | |
|---|---|
| மாணவர்கள் சிலர் பள்ளித் திடலில் விளையாடிக்கொண்டிருந்தனர். திடீரென்று சண்டை போட்டுக் கொண்டதைப் பார்த்த ஆசிரியர் அவர்களை ________ | Q24 ( ) |
| நாங்கள் கடற்கரையில் அமர்ந்திருந்தோம். அப்போது சில நண்டுகள் ________ புகுந்து விளையாடுவதைப் பார்த்தோம். | Q25 ( ) |
| தலைமையாசிரியர் மிகச் சிறந்த முறையில் ________ ஆற்றினார். அது எங்களது எதிர்காலத்தை முன்னிட்டு எங்களை ஆழமாகச் சிந்திக்க வைத்தது. | Q26 ( ) |
| திரு குமார் ஒரு விலையுயர்ந்த பேனா வாங்கினார். கடைக்காரரிடம் அவர் தன் பெயரை அதில் ________ கொடுக்கச் சொன்னார். | Q27 ( ) |
| ரவி பல நாட்களுக்குப் பின் தன் தாத்தாவைச் சந்தித்தான். அவன் தன் தாத்தாவை அன்புடன் ________ முத்தமிட்டான். | Q28 ( ) |

| | |
|---|---|
| (1) அனைத்து | (2) விலக்கினார் |
| (3) வளையில் | (4) அணைத்து |
| (5) பொறித்து | (6) உறை |
| (7) விளக்கினார் | (8) வலையில் |
| (9) உரை | (10) பொரித்து |

**D7 முன்னுணர்வுக் கருத்தறிதல்**

பின்வரும் பகுதியில் Q29 முதல் Q35 வரையுள்ள கோடிட்ட இடங்களை நிரப்புவதற்கு ஏற்ற சொற்கள் இப்பகுதியின் அடியில் கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றிலிருந்து ஒவ்வொரு கோடிட்ட இடத்தையும் நிரப்புவதற்கு ஏற்ற மிகச் சரியான விடையைத் தேர்ந்தெடுத்து அதன் எண்ணை அடைப்புக்குறிக்குள் எழுது. (14 மதிப்பெண்கள்)

சிறுவன் ஒருவன் தன்னந்தனியாகக் காட்டு வழியாகச் சென்று கொண்டிருந்தான்.

(29) ( ) அவன் எதிரே சிங்கம் ஒன்று வந்தது. தப்பிக்க வழி இல்லை என்பதை 29 ( )

(30) ( ) அவன் தவியாய்த் தவித்தான். கண்களை மூடியபடி, "கடவுளே! நீதான் 30 ( )

என்னைக் காப்பாற்ற வேண்டும் என்று (31) ( ) நின்றான். 31 ( )

32 ( )

சிறிது நேரம் கழிந்தது. சிங்கம் தன்மீது (32) ( ) அறிந்து கண்களைத் திறந்து பார்த்தான். அவன் எதிரில் சிங்கமும் கண்களை மூடியபடி தலையை (33) ( ) இறைவனை வழிபட்டுக் கொண்டிருந்தது. 33 ( ) உடனே அவன், "சிங்கமே! உன்னைப் பார்த்ததும் என் உயிருக்கு ஆபத்து வந்துவிட்டது என்று அஞ்சினேன். (34) ( ) நீயும் 34 ( ) என்னைப் போலவே கடவுளை வழிபடுவதைப் பார்க்க எவ்வளவு மகிழ்ச்சியாக இருக்கிறது?" என்றான்.

கண்களைத் திறந்த சிங்கம், "பேசாமல் இரு. (35) ( ). எப்போதும் உணவு 35 ( ) ~~கிடைத்தாலும் இறைவனுக்கு நன்றி சொல்லி விட்டுத்தான் உணவு உண்பேன்,"~~ என்று கூறியது. அதைக் கேட்ட சிறுவன் அங்கிருந்து ஓட்டம் பிடித்தான்.

| | | |
|---|---|---|
| (1) ஆனால் | (2) எனக்கு | (3) தாழ்த்தி |
| (4) திடீரென்று | (5) விரைந்து | (6) பாயாததை |
| (7) சிரமப்பட்டு | (8) வேண்டி | (9) பார்த்தான் |
| (10) பயன்படுத்த | (11) நோக்கி | (12) உணர்ந்த |

**D8 சுயவிடைக் கருத்தறிதல்**

பின்வரும் கட்டுரைப் பகுதியைக் கருத்தூன்றிப் படி.

சீன நாட்டை டான் கீ என்னும் அரசர் ஆண்டு வந்தார். தனக்குப் பின் அந்நாட்டை ஆள இளவரசனுக்கு எல்லாத் தகுதிகளும் இருக்க வேண்டும் என அவர் நினைத்தார். அதனால் இளவரசனை ஒரு குருவிடம் அனுப்பி வைக்க முடிவு செய்தார். இளவரசன் கல்வியிலும், வித்தைகளிலும் சிறந்து விளங்க குருவைத் தேடி ஆசிரமத்திற்குச் சென்றான். குருவும் அவனது ஆசைக்கு இணங்கி அவனுக்குப் பல வித்தைகளைக் கற்றுக் கொடுத்தார்.

ஒருநாள் குரு இளவரசனை அழைத்து, "நீ கானகத்திற்குச் சென்று அங்கு காதில் விழும் ஓசைகளைப் பற்றி என்னிடம் வந்து கூறு," என்று ஆணையிட்டார். நாட்டை ஆட்சி செய்வதற்கும் காட்டில் கேட்கக்கூடிய ஒலிக்கும் என்ன சம்பந்தம் இருக்கிறது என்று எண்ணி இளவரசன் ஒன்றும் புரியாமல் விழித்தான். ஆயினும் இளவரசன் பயணத்திற்குத் தயாரானான். வெகு தூரம் பயணம் செய்து கானகப் பகுதியை வந்து சேர்ந்தான். சில நாட்கள் அங்கேயே தங்கி கானகத்தில் எழும்பிய ஓசைகளைக் கேட்டுவிட்டு மீண்டும் ஆசிரமத்திற்கு வந்தான்.

இளவரசன் குருவை அணுகி, "குருவே, கானகத்தில் பல வகையான பறவைகளின் ஒலிகளையும், விலங்குகளின் ஒலிகளையும் மற்றும் இடி, மழை, காற்று ஆகியவற்றின் ஒலிகளையும் சிறப்பாகவும் தெளிவாகவும் கேட்டேன்," என்று பணிவாகப் பதில் கூறினான். குரு சிரித்துவிட்டு, "இளவரசே! நீங்கள் இன்னும் கானகத்தில் எழக் கூடிய துல்லிதமான ஒலிகளைச் சரியாகக் கேட்கவில்லை!" என்று கூறி அவனை மீண்டும் கானகத்திற்கு அனுப்பி வைத்தார். இவ்வாறு இளவரசர் மூன்று முறை கானகத்திற்குச் சென்றுவிட்டார்.

மூன்றாவது முறை, இளவரசன் ஆசிரமத்திற்கு திரும்பி வந்து குருவிடம், "குருவே, இம்முறை நான் ஆழ்ந்து யோசித்ததால் சாதாரணமாகக் கேட்க முடியாத ஓசைகளையும்

மௌனமொழிகளையும் கேட்க முடிந்தது. பூக்கள் மலரும் ஓசையையும் சூரியனால் பூமி சூடாகும்போது எழும் ஓசையையும் செவிகளால் கேட்டு, மனத்தால் உணர நேர்ந்தது," என்றான்.

இளவரசனின் பதிலைக் கேட்டு திருப்தியடைந்த குரு, "இப்போது தான் நாட்டை ஆளும் தகுதி உன்னிடம் தெரிகிறது. நீ நாட்டு மக்களின் உள்ளத்தினுள் பேசும் மௌனமொழிகளைக் கேட்கும் ஆற்றலைப் பெற்றுள்ளாய்" என்று கூறி இளவரசனை மனதார வாழ்த்தினார். நாடு திரும்பிய இளவரசன் அரசரால் முடி சூட்டப்பட்டு மக்களின் ஆதரவைப் பெற்று நல்லாட்சி புரிந்தான். அந்நாட்டு மக்கள் இளவரசனை மனமார வாழ்த்திப் பாராட்டினர்.

**Q36 முதல் Q41 வரையுள்ள வினாக்களுக்கு மேற்கண்ட பகுதியிலிருந்து விடைகளைக் கண்டறிந்து எழுது. (20 மதிப்பெண்கள்)**

36. சீன அரசர் ஏன் தன் மகனைக் குருவிடம் அனுப்பி வைத்தார்? (3 மதிப்பெண்கள்)

______________________________________________

______________________________________________

______________________________________________

37. குரு இளவரசன் குமரனுக்கு என்ன கட்டளை இட்டார்? (2 மதிப்பெண்கள்)

______________________________________________

______________________________________________

______________________________________________

38) இளவரசன் ஒன்று புரியாமல் விழித்ததற்கு என்ன காரணம் ? (3 ம.பெ)

39) முதல் தடவை இளவரசன் கானகத்தில் எதைக் கேட்டதாகக் கூறினான்? (4 ம.பெ)

40) இறுதியில் இளவரசன் குமரன் எத்தகைய ஆற்றலைப் பெற்றிருப்பதாகக் குரு கூறினார்? (4 ம.பெ)

41) மக்களின் பாராட்டைப் பெற மன்னன் என்ன செய்தான்?(4 ம.பெ)

P –6

## P6 PRELIMINARY TESTPAPER 12

பள்ளி முடிந்து வீட்டிற்குத் திரும்பாமல்...

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1) 2 | 2) 3 | 3) 4 | 4) 3 | 5) 3 | 6) 1 |
| 7)2 | 8) 3 | 9) 1 | 10) 1 | 11) 2 | 12) 4 |
| 13) 4 | 14) 4 | 15) 2 | 16) 2 | 17) 3 | 18) 2 |
| 19) 2 | 20) 1 | 21) 1 | 22) 4 | 23) 2 | 24) 2 |
| 25) 8 | 26) 9 | 27) 5 | 28) 4 | 29) 4 | 30) 12 |
| 31) 8 | 32) 6 | 33) 3 | 34) 1 | 35) 2 | |

36) சீனப் பேரரசர் தனக்குப் பின் சீன நாட்டை ஆள இளவரசனுக்கு எல்லாத் தகுதிகளும் இருக்க வேண்டும் என்று நினைத்தான்.மேலும் இளவரசன் கல்விகளையும் வித்தைகளையும் அறிந்து கொள்வதற்காகக் குருவிடம் அனுப்பி வைத்தார்.

37) குரு இளவ்ரசனை கானகத்திற்குச் சென்று அங்கு காதில் விழும் ஓசைகளைப் பற்றித் தன்னிடம் வந்து கூறும்படி அவனுக்கு கட்டளை இட்டார்.

38)நாட்டில் ஆட்சி செய்வதற்கும் காட்டில் கேட்கக்கூடிய ஒலிக்கும் என்ன சம்பந்தம் என்று எண்ணியதே இளவரசன் ஒன்று புரியாமல் விழித்ததற்குக் காரணம் ஆகும்.

39) முதல் தடவை இளவரசன் கானகத்தில் பல வகையான பறவைகளின் ஒலிகளையும், விலங்குகளின் ஒலிகளையும் மற்றும் இடி, மழை, காற்று ஆகியவற்றின் ஒலிகளையும் கேட்டதாகக் கூறினான்.

40) இறுதியில் இளவரசன் குமரன் நாட்டு மக்களின் உள்ளத்தினுள் பேசும் மௌன மொழிகளைக் கேட்கும் ஆற்றலைப் பெற்றிருப்பதாகக் குரு கூறினார்.

41) மன்னன் தான் காட்டில் பெற்ற அனுபவத்தைக் கொண்டு நாட்டு மக்களின் விருப்பத்தை அறிந்து நல்லாட்சி புரிந்ததால் நாட்டு மக்களின் பாராட்டை அவன் பெற்றான்.